மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது 12 மாநிலங்களுக்காக அப்படிப்பட்ட சிறப்புப் பிரதிநிதிகள் டில்லியில் இருந்துகொண்டு மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் இடையே நல்ல முறையில் தொடர்புப் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அமைச்சர்களேகூட பல நேரங்களில் தங்களுடைய மாநிலத்தைப்பற்றிய முறையீடுகளைத் தெரிவிக்க வேண்டியவர்களாக இருந்தாலும் மத்திய அரசாங்கத்திலுள்ள அதிகாரிகளை அணுகிட வேண்டும். மத்திய அமைச்சர்களை அணுகிட உதவும் வாய்ப்பாக இருந்தால் நல்ல பயன்தரும் என்ற அளவிலேதான் புதிதாக இந்த அதிகாரியை இந்த அரசு நியமித்திருக்கிறது.

DR. H. V. HANDE : While I cannot subscribe to the views of my colleague Thiru K. Vinayakam. . . .

THIRU K. VINAYAKAM : I object to this kind of insinuation.

DR. H. V. HANDE : I wish to know from the Government whether it is not a fact that a number of cases go by default since we have not made proper representations before the Central Government. In view of the fact that we have inter State problems like the 'Cauveri problem', will the Government extend the scope of the work of this officer to look after not only Centre-State relationship but also inter-State problems like sharing of the waters of river Cauveri, so that they are properly solved at the Centre?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய அரசாங்கத்திடமிருந்து ஆகவேண்டிய எல்லா வேலைகளையும் இந்தப் பதவியில் இருக்கின்ற அதிகாரிகள் மூலம் கவனிக்கலாம் என்பதற்காகத்தான் இந்தப் பதவி உருவாக்கப்பட்டிருக்கிறது.

I.A.S. Officers in Technical Departments

* 187 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state the number of officers of the Indian Administrative Service now posted as Heads of Technical departments in the State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொழில் நுட்பத் துறை என்று எந்தத் துறையும் அறிவிக்கப்படவில்லை. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் தலைமையின்கீழ் இயங்கும் துறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. பத்திரப் பதிவுத் துறைத் தலைவர், சென்னை-1.
3. பால் உற்பத்தி-கால் நடை வளர்ப்புத் துறை ஆணையாளர்.
3. பால் உற்பத்தி-கால் நடை வளர்ப்புத் துறை ஆணையாளர்.
4. தொழில்-வணிகத் துறை இயக்குனர்.
5. வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குனர்.
6. தொழிலாளர் துறை ஆணையாளர்.

7. மீன் வளத் துறை இயக்குனர், சென்னை.

8. கிராம வளர்ச்சித் துறை இயக்குனர்.

9. வேளாண்மைத் துறை இயக்குனர்.

10. சிறு சேமிப்பு இயக்குனர்/அரசுப் பரிசுச் சீட்டுத் துறை இயக்குனர்.

11. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர்.

12. சிறப்பு அதிகாரி, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்.

13. கைத்தறி இயக்குனர்.

14. எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குனர்.

15. மறுவாழ்வுத் துறை இயக்குனர்.

16. பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை இயக்குனர்.

17. அரிசன நலத்துறை இயக்குனர்.

18. தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை இயக்குனர்.

19. நகராட்சிகள் நேடுநர்.

20. கருவூலங்கள்—கணக்குத் துறை இயக்குனர்.

மேற்குறிப்பிட்ட துறைகள் ஏதாவதொன்றில் ஒரு பொருள் பற்றி முடிவுக்கு வர தொழில் நுட்ப அறிவு தேவை என்று கருதப் படும் நேர்வுகளில் அதே துறையிலாயினும் அல்லது தொடர்பான பிற துறைகளிலாயினும் உள்ள தொழில் நுட்ப அதிகாரியைத் துறைத்தலைமை அதிகாரி கலந்து செயல்படுகிறார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலே ஐ.ஏ.எஸ். படித்தவர்களாக வெள்ளைக்காரர்களே இருந்தார்கள். ஒவ்வொரு துறையிலும் வெள்ளைக்காரர்களேதான் அதிகாரிகளாக இருக்கவேண்டுமென்ற முறையிலேதான் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட்டார்கள். இப்போது ஒவ்வொரு துறையிலும் நல்ல தகுதியும் திறமையும் அனுபவமும் உள்ள அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களைப் போடாமல் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடுவது அவர்களுக்கு மனச்சோர்வையும் அதிருப்தியையும் அளிக்கிறது. ஆகவே, இனிமேலாவது அந்தந்தத் துறையிலுள்ள அதிகாரிகளைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் . . .

திரு. என். எஸ். வி. சித்தன் : ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அல்ல, ஐ.சி.எஸ். அதிகாரிகள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஐ.சி.எஸ். அதிகாரிகள் வெள்ளைக்காரர்களாக இருந்தார்கள். அவர்களை நியமிக்கவேண்டும் என்பதற்காக இந்த முறை அமையவில்லை. அப்படி இருந்தால் பழைய சர்க்காரே இந்த ஐ.ஏ.எஸ். முறையை பின்பற்றாமல் இருந்திருக்கலாம். நிர்வாக வசதிகளின் பொருட்டு தலைமை இடங்களிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கவேண்டுமென்ற எண்ணத்திலே அரசு செயல்பட்டு வருகிறது.

THIRU T. MARTIN: There are certain departments whose Heads require extensive technical knowledge. For proper functioning of such departments, viz., Electricity Board, will the Government come forward to appoint such personnel who have extensive technical experience to man the same?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதிலே டெக்னிகல் அறிவை மாத்திரம் பார்க்க முடியாது. நிர்வாகத் திறனும் முக்கியம்.

Liquor Permits

*188 Q.—THIRU A. M. RAJA:

THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether liquor permits have been granted to any of the I.C.S., I.A.S. and I.P.S. Officers in our State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, பணக்காரர்கள் லைசென்ஸ் பெற்று மது அருந்துகிறார்கள். ஆனால் அதேபோல் ஏழைகள் லைசென்ஸ் பெறமுடிவதில்லை. சட்டத்தின் மூலம் மது அருந்தக்கூடாது என்று சொல்வதால் செலவும் அதிகம் ஆகிறது, அரசாங்கத்திற்கு வருமானமும் குறைகிறது. எனவே இந்த மதுவிலக்கை ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி பர்மிட் கொடுப்பது பற்றியது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாக் காலம் ஆனதினாலே பர்மிட்டுக்கு மனு செய்துள்ளவர்களில் யாராவது 'வித்டிரா' செய்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய யோசனையைக் கேட்டு அவர்களே கொஞ்ச காலம் பின்வாங்கிக் கொள்வார்களானால் நலமாக இருக்கும்.

Eradication of Leprosy

*189 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Union Government have consulted the State Government on the launching of a crash programme to eradicate Leprosy in Madras;

(b) if so, the details thereof; and

(c) the amount likely to be got from the Centre?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.